# Special Education




# விசேட கல்வி

பாடசாலைக்கான பாடவேலைகளுடன் அல்லது பாடசாலை வாழ்க்கை முறையுடன் போராடும் காலம் மாணவர்கள் எல்லோருக்கும் ஏற்படுவது உண்டு. எனினும் சில மாணவர்களுக்கு இவ்வாறான சந்தர்ப்பங்களில் விசேட கல்வித் திட்டங்கள் மூலமாக வழங்கப்படும் மேலதிக உதவியாதரவு தேவைப்படுகிறது.

பாடசாலையில் தமது மகன் அல்லது மகள் கஷ்டத்தை சந்தித்து வருகிறார் என்பதை முதலில் கவனிப்பவர்கள் பிள்ளைகளின் பெற்றோராகவே இருக்கும். அல்லது ஓர் ஆசிரியர் ஒரு பெற்றாரிடம் அவரது மகன் அல்லது மகளுக்கு மேலதிகமான உதவியாதரவு தொடர்ந்து கொடுப்பது அவசியம் எனப் பரிந்துரைக்கக் கூடும்.

## ஞாபகத்தில் கொள்ள வேண்டிய சில விடயங்கள்

- உங்கள் பிள்ளை சம்பந்தமான சில பிரச்சினைகள் வகுப்பறை ஆசிரியரே தீர்க்கக் கூடியனவாக இருக்கலாம். எனவே உங்கள் பிள்ளையின் முன்னேற்றம் பற்றி உங்களுக்கு கவலை தோன்றினால் முதலில் ஆசிரியருடன் கதையுங்கள்.
- விசேட முறையிலான கல்வி உதவியாதரவு தேவைப்படும் விதத்தில் ஒரு பிள்ளை இருப்பது மோசமான ஒரு நிலையாகக் கருதலாகாது. எல்லா மாணவர்களும் தம்மிடையே வேறுபட்ட முறைகளில் கல்வியை கிரகித்துக் கொள்ளுகின்றனர். இவர்களில் சிலர் வெற்றியடைவதற்கு வேறுபட்ட வகையிலான உதவியாதரவு தேவைப்படுகிறது.
- உங்கள் பிள்ளை ஆங்கிலம் பேசுவதில்லை என்ற ஒரு காரணத்தால் மட்டும் அவருக்கு விசேட கல்வி உதவி தேவைப்படுகிறது என்று கருதிவிட முடியாது. அவருக்கு உள்ள சில பிரச்சினைகள் உண்மையில் ஒரு பிள்ளை புதிய ஒரு மொழியையும் பாடசாலையையும் கண்டு அவற்றுக்கு ஏற்ப தன்னை மாற்றும் பொழுது இயற்கையாக ஏற்படுவனவாக இருக்கும். குறித்த மாணவர் தனது சொந்த மொழியில் அடைந்துள்ள பாடவியல் திறன்களை அதிபர் அறிந்து கொள்வதற்கு இது உதவுகிறது.
- பிள்ளைக்கான விசேட கல்வி உதவியாதரவு பெறுவதற்கான முயற்சியின் பொழுது அதில் உள்ள சில அம்சங்கள் குழப்பம் தருவனவாக தோன்றலாம். பழகியிராத பெயர்கள் அவற்றுக்கு சூட்டப்பட்டு இருக்கலாம். உங்களுக்கு புரியாத விடயங்கள் ஏதும் இருந்தால் எப்பொழுதும் கேள்விகள் கேளுங்கள்: அல்லது ஆங்கிலத்தில் பேசுவது உங்களுக்கு அசௌகரியமாக இருந்தால் மொழி பெயர்ப்பு உரையாளர் ஒருவர் வேண்டுமெனக் கேளுங்கள்.
- விசேட கல்வி முறையில் பெற்றோர் ஒரு முக்கிய பங்கினை வகிக்கின்றனர். உங்கள் முயற்சியை கைவிடாதீர்கள். உங்கள் பிள்ளைக்கு உதவியாதரவு கோருவதில் தவறு எதுவும் இல்லை.

## விசேட கல்வி என்றால் என்ன?

பாடசாலையில் வெற்றிகரமாகச் செயற்படுவதற்கு அனுசரணையாக, வேறுபட்ட கற்பித்தல் முறைகள் அல்லது விசேட உபகரணங்கள் தேவைப்படும் மாணவர்களுக்கு என்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ள பல வகைப்பட்ட உதவியாதரவு கருவிகள், கல்வித் திட்டங்கள், நியமிப்பு இடங்கள் போன்றவற்றை உள்ளடக்கியதாக இவ்விசேட கல்வி அமைந்துள்ளது.

விசேட கல்வி எனும் பொழுது, வித்தியாசமான ஒரு முறையில் கற்பித்தல் தொடக்கம், பாடவேலைக்கு உதவக்கூடிய விசேடித்த உபகரணங்கள் வழங்குதல் மற்றும் சோதனைகள் எழுதும்போது மாணவர்களுக்கு அதிகரித்த நேரம் வழங்குதல் வரையிலான பல விடயங்கள் அதில் அடங்கியிருக்கலாம். இதனைப் பெறும் மாணவர்கள் ஒரு பாடசாலை நாள் பொழுதில் முழுநேரமோ அல்லது ஒரு பகுதி நேரமோ விசேடமான வகுப்பு ஒன்றில் கல்வி கற்பர். அல்லது கல்வி உதவியாளர் ஒருவர் வழங்கும் உதவியாதரவுடன் மாணவர்கள் தமது வழக்கமான வகுப்பில் இருந்தவாறே கல்வி கற்பர்.

இதில் பிரதானமாக நினைவில் வைத்திருக்க வேண்டிய விடயம் எதுவெனில் இவ்விசேட கல்வியானது உங்கள் பிள்ளை பாடசாலையில் வெற்றி பெற வேண்டும் என்ற நோக்குடன் உருவாக்கப்பட்டுள்ளது என்பதாகும்.

## பிள்ளைக்கு விசேட கல்வி முறையிலான உதவியாதரவு தேவை என்று எண்ணினால் நீங்கள் என்ன செய்ய வேண்டும்?

### கேள்விகள் கேளுங்கள்

- உங்கள் பிள்ளைக்கு தொடர்ந்து கஷ்டமாக அமையும் குறிப்பிடத்தக்க விடயங்கள் ஏதாவது பாடசாலையில் உண்டா என்று உங்கள் பிள்ளையிடம் கேளுங்கள்.
- உங்கள் மகன் அல்லது மகளுக்கு மேலதிக உதவியாதரவு தேவைப்படுகிறதா என்று ஆசிரியரின் எண்ணங்களை கேட்டு அறியுங்கள். அத்துடன் அந்த மேலதிக உதவியினை ஆசிரியரே வழங்க முடியுமா எனவும் அவரிடம் கேளுங்கள்.
- மருத்துவ ரீதியிலான சில ஆரோக்கிய நிலைமைகள் (உ-ம்: காதால் கேட்டல், கண்பார்வை முதலியன) கல்வி கற்பதை பாதிக்கக் கூடியனவாக உள்ளன. எனவே பிள்ளையின் மருத்துவருடன் அப்பிள்ளை பற்றி உரையாடுவதும் பயன்தருவதாக அமையலாம்.

### பாடசாலைப் பணியாளர் குழுவினைச் சந்தியுங்கள்

- உங்கள் மகன் அல்லது மகளுக்கு கூடுதலான உதவி தேவைப்படுகிறது என்று நீங்கள் எண்ணினால் பாடசாலை அதிபர் அல்லது உபஅதிபரிடம், அவர்கள் பாடசாலை பணியாளர் குழுவின் மற்றைய அங்கத்தவர்களுடன் சேர்ந்து (*பாடசாலைக் குழுக் கூட்டம் / School Team Meeting* என்ற) ஒரு கூட்டத்தை கூட்டி உங்கள் பிள்ளையைப் பற்றி கலந்துரையாடும்படி கோருங்கள்.
- இக்கூட்டத்திற்கு முன்பாகவே உங்களை தயார்ப்படுத்திக் கொள்ளுங்கள். உங்கள் கேள்விகளை எழுதி வைத்துக் கொள்வது சில சமயங்களில் உதவியாக இருக்கும். கேள்விகளுக்கு உதாரணங்கள்:
  - எனது பிள்ளை படிப்பில் வெற்றி பெற என்ன வகையான உதவியாதரவு கருவிகள் அல்லது திட்டங்கள் துணை புரியும்?
  - சம்பந்தப்பட்ட பாடசாலையில் கிடைக்கக் கூடியனவாக உள்ளன எவை?
  - சரியான திட்டம் ஒன்றினுள் புகுவதற்கு எனது மகன் அல்லது மகள் நீண்டகாலம் காத்திருக்க நேரிடுமா?
- பாடசாலைக் குழுக் கூட்டத்தில் பணியாளர் குழு பின்வருவனவற்றில் ஒன்று அல்லது அதனிலும் கூடியவற்றை பின்பற்றும்படி பரிந்துரைக்கக் கூடும்:
  - ஆசிரியரே வகுப்பறையில் மாணவருக்கான உதவியாதரவினைத் தொடர்ந்து வழங்க வேண்டும்.
  - சம்பந்தப்பட்ட ஆசிரியர் /குழு மூலம் குறித்த மாணவருக்கு என்று ஒரு தனிப்பட்ட கல்வித் திட்டம் (Individual Education Plan /IEP) வரைந்து எடுக்க வேண்டும்.
  - குறித்த மாணவருக்கு விசேட தேவைகள் இருக்கின்றனவா என்றும் அத்தேவைகள் எவை என்றும் கண்டறிவதற்காக அவர் மீது ஓர் ஒழுங்குமுறையிலான "நிலைமை மதிப்பீடு" (assessment) நடாத்த வேண்டும். **அத்துடன் / அல்லது**
  - இதைவிட உயர் அளவில் ஓர் ஒழுங்குமுறையிலான கூட்டத்தை பாடசாலை நடாத்த வேண்டும். இதற்கான குழு அடையாளம் காணல், நியமிப்பு மற்றும் மீளாய்வுச் செயற்குழு (Identification Placement and Review Committee / IPRC) எனப்படும்.

## விசேட கல்வி நிலைமை மதிப்பீடு என்றால் என்ன?

விசேட கல்வி "நிலைமை மதிப்பீடு" என்பது ஒரு மாணவருக்கு விசேட தேவைகள் இருக்கின்றனவா என்றும் அத்தேவைகள் எவை என்றும் தீர்மானிப்பதற்காக அம் மாணவர் பற்றி ஒரு தொழில் துறை நிபுணர் நடாத்துகின்ற கணிப்பு ஆகும். உங்கள் பிள்ளை பற்றிய நிலைமை மதிப்பீடு செய்யப்படுவதற்கு நீங்கள் என்ன செய்ய வேண்டுமென்று உங்கள் பாடசாலை அதிபர் அல்லது உபஅதிபர் விளக்கம் தருவதற்கு முடியும்.

people for Education
BECAUSE EDUCATION MATTERS MOST

Copies are available in several languages at *www.peopleforeducation.com.*

For more information, call 416-534-0100 or email: *info@peopleforeducation.com*
© People for Education 2009
THE ONTARIO TRILLIUM FOUNDATION
LA FONDATION TRILLIUM DE L'ONTARIO

toronto community foundation

# Special Education

பெற்றோருக்கு எதுவித செலவுமின்றி மாணவர்களை நிலைமை மதிப்பீடு செய்யக் கூடிய தொழில் துறை நிபுணர்கள் கல்விச்சபைப் பணியாளர்கள் மத்தியில் இருக்கிறார்கள். ஆனாலும் இச்சேவைக்காக காத்திருப்போர் பட்டியல் ஒன்று இருக்கலாம்.

## IEP என்றால் என்ன ?

தனிப்பட்ட கல்வித் திட்டம் (Individual Education Plan /IEP) என்பது உங்கள் பிள்ளைக்கு உதவுவதற்காக பாடசாலை என்னவெல்லாம் செய்யும் என்பதை விபரிக்கிறது. இத்திட்டம் பெற்றோரின் ஆலோசனையுடன் உருவாக்கப்படுதல் வேண்டும். **ஒரு தனிப்பட்ட கல்வித் திட்டத்தை (IEP) பெற்றுக்கொள்வதற்கு முன்பாக ஒரு மாணவர் ஒழுங்குமுறையிலான நிலைமை மதிப்பீட்டுக்கு உள்ளாக வேண்டும் என்ற தேவை எதுவும் இல்லை.**

IEP திட்டத்தில் பின்வருவன அடங்கியிருத்தல் வேண்டும்:

- மாணவரின் வலிமை, இயல்புகள் மற்றும் தேவைகள் அடங்கிய ஒரு பட்டியல்;
- மாணவர் பெறுவதற்கு உள்ள விசேட கல்விச் சேவைகள் எவை என்பதுடன், எங்கே மற்றும் எப்பொழுது சேவை வழங்கப்படும், அத்துடன் யார் அதனை வழங்குவர் என்பவை பற்றிய மேலோட்ட விபரம்;
- மாணவர் அடையும் முன்னேற்றம் எவ்வாறு அளக்கப்படும் மற்றும் மீளாய்வு செய்யப்படும் என்பதன் விளக்கம்;
- சம்பந்தப்பட்ட வருடத்தில் மாணவரும் ஆசிரியரும் அடைய முயற்சிக்க வேண்டிய நோக்குகளின் தொகுதி ஒன்று; அத்துடன்
- வழங்கப்பட உள்ள ஏதும் விசேட உபகரணங்களின் ஒரு பட்டியல்.

உங்களுடைய பிள்ளைக்கு விசேடமான நியமிப்பு இடம் (placement) வழங்கப்பட்டு அடுத்து வரும் 30 பாடசாலை நாட்களின் உள்ளாக ஒரு IEP கல்வித்திட்டம் பூரணமாக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அதன் பிரதி ஒன்று உங்களுக்கு கிடைப்பதையும் பாடசாலை அதிபர் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். ஒரு IEP கல்வித்திட்டமானது அதற்குரிய ஒவ்வொரு அறிக்கைக் காலப்பகுதியிலும் மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும்.

## IPRC என்றால் என்ன ?

பாடசாலைக் குழு, சிலவேளைகளில் சம்பந்தப்பட்ட பாடசாலையானது ஓர் அடையாளம் காணல், நியமிப்பு மற்றும் மீளாய்வுச் செயற்குழுவின்(IPRC) கூட்டம் ஒன்றினை நடாத்த வேண்டுமென்று பரிந்துரை செய்யும். மாணவரின் விசேட தேவைகளை (தவிர்ப்பு இயல்புகள்) உத்தியோக பூர்வமாக அடையாளம் காணுவதற்காக ஒன்றுகூட்டப்படும் ஒரு கூட்டம் இதுவாகும்.

IPRC கூட்டம் ஒன்றினை நடாத்தும்படியான வேண்டுகோளை பெற்றோர் *அல்லது* பாடசாலை முன்வைக்கக் கூடும். பெற்றோர் எழுத்தில் இவ்வாறான ஒரு வேண்டுகோளை முன்வைக்கும் பொழுது IPRC கூட்டம் நடாத்தப்பட வேண்டும். கூட்டம் சம்பந்தமான விபரங்களை பாடசாலை பெற்றோருக்கு அறிவிக்க வேண்டும் என்பதுடன் **பெற்றோர் இக்கூட்டத்திற்கு வருகை தரவேண்டுமென்பதும் மிக முக்கியமான ஒன்றாகும்**. IPRC கூட்டத்தில் பின்வருவனபற்றி உத்தியோக பூர்வமாக தீர்மானம் எடுக்கப்படும்:

- மாணவருக்கு விசேடமான கற்கை சம்பந்தப்பட்ட தேவைகள் உள்ளனவா,
- குறித்த மாணவருக்கு என்ன வகையான கற்கை சம்பந்தப்பட்ட தேவைகள் உள்ளன, அத்துடன்
- குறித்த மாணவருக்குப் பொருத்தமான நியமிப்பு இடம் வழங்கல் மற்றும் கல்வித்திட்டம் ஆகியன.

## IPRC கூட்டத்தில் என்ன நடைபெறுகிறது: அதில் பெற்றோருக்கும் ஒரு பங்கு இருக்கிறதா?

IPRC கூட்டத்தில் பங்குபற்றுவோரில் மாணவரின் ஆசிரியர் அத்துடன்/அல்லது வழிகாட்டும் ஆலோசகர், பாடசாலை அதிபர், உளவியலாளர் ஒருவர், பாடசாலைச் சபைப் பிரதிநிதி ஒருவர் மற்றும் பெற்றோர் ஆகியோர் வழக்கமாக அடங்கி இருப்பர்.

பாடசாலைப் பணியாளர்கள் **மற்றும்** பெற்றோர் ஆகியோரிடம் இருந்து பெறும் தகவலினைக் கொண்டு, சம்பந்தப்பட்ட மாணவருக்கென நியமிப்பு இடம் ஒன்றினை இக்குழு பரிந்துரைக்கும். குழு பரிந்துரைப்பவற்றை ஏற்றுக் கொள்வதாக உறுதியளிக்கும் ஒரு ஆவணத்தில் கையொப்பம் இடும்படி பெற்றோரிடம் கேட்கப்படும். இந்த ஆவணத்தை நீங்கள் வீட்டுக்கு எடுத்துச் சென்று அதில் கையொப்பம் இடுவதா என யோசித்து முடிவு செய்யலாம்.

IPRC கூட்டத்தில் பங்குபற்றுவதற்கு எனச் சில தகவல் துணுக்குகள்:

- இக்கூட்டத்துக்கு வரும்பொழுது குடும்ப அங்கத்தவர் ஒருவர், ஒரு நண்பர் அல்லது ஆதரவு உதவி வழங்கும் ஒரு சங்கத்தைச் சேர்ந்த ஒருவரையும் நீங்கள் அழைத்து வர முடியும்.
- மாணவரின் மருத்துவ ரீதியான நிலைமை அல்லது அவரது கற்கைத் திறன்கள் ஆகியன பற்றிய வைத்தியரின் குறிப்புகள் அல்லது மதிப்பீட்டு அறிக்கைகள் ஏதாவது இருப்பின் கொண்டு வரவும்.
- யாரைப்பற்றித் தாம் உரையாடுகிறோம் என்று குழுவினர் அறிந்து கொள்ள உதவும் வகையில் உங்கள் பிள்ளையின் புகைப்படம் ஒன்றினையும் எடுத்துச் செல்லவும்.
- குறிப்பிட்ட ஒரு நியமிப்பு இடம் பரிந்துரைக்கப் படுமானால் அதனைச் சென்று பார்வையிட விரும்புவதாகக் கேட்கலாம் .
- IPRC குழுவினால் எடுக்கப்படும் தீர்மானத்துக்கு நீங்கள் இணங்கவில்லை என்றால் அதற்கு எதிராக நீங்கள் மேன்முறையீடு செய்யலாம். ஆனால் மேன்முறையீடு செய்வதற்கு ஒரு காலக் கட்டுப்பாடு இருக்கிறது. இதற்கான செயல்முறை பற்றி உங்கள் பாடசாலை அதிபர் விளக்கம் தரமுடியும்.
- IPRC குழுவின் செயல்முறை மிகவும் ஒழுங்கு விதிக்கு உட்பட்ட ஒரு செய்கைபோலத் தோன்றக் கூடும். ஆனால் இதன் அடிப்படையில், உங்கள் பிள்ளைக்கு நீங்கள் தொடர்ந்து உதவியாதரவு வழங்கும்படி கோரும் சட்டரீதியான உரிமை உங்களுக்கும் உங்கள் பிள்ளைக்கும் இருக்கும். பாடசாலையில் அவர் வெற்றி ஈட்டுவதற்கு இது உதவியாக அமையும்.

## காலப் போக்கில் எனது பிள்ளைக்கான உதவியாதரவில் மாற்றம் ஏற்படுமா?

- ஒவ்வொரு பாடசாலை வருடத்திலும் குறைந்தது ஒரு தடவையாவது உங்கள் பிள்ளைக்கு வழங்கப்பட்ட நியமிப்பு இடம் பற்றி மீளாய்வு செய்யப்படும். இந்த மீளாய்வின் பொழுது மாற்றங்கள் செய்யும்படியோ அல்லது மேலதிக தகவல் தரும்படியோ நீங்கள் கேட்கமுடியும்..

## உதவியைத் தேடிப் பெற்றோர் எங்கு செல்லமுடியும்?

- இது தொடர்பிலான தகவலினை உங்கள் ஆசிரியர், பாடசாலை அதிபர் அல்லது வழிகாட்டும் ஆலோசகரிடம் கேளுங்கள்.
- மேலதிக தகவலும், விசேட கல்வி சம்பந்தப்பட்ட பிற நிறுவனங்களுக்குரிய கணினி இணைப்புகளும் கல்விக்கான மக்கள் (People for Education) அமைப்பின் பின்வரும் இணையத் தளத்தில் பெறக்கூடியதாக உள்ளன: http://www.peopleforeducation.com/links/specialed
- பாடசாலைக்குரிய குடியமர்வுப் பணியாளர் ஒருவர் உங்களுக்கு இருப்பாராயின் விசேடகல்வி பெறுவதற்கான செயல்முறை பற்றி விளக்கம் தந்து அவர் உதவமுடியும்.
- தகவல் பெறும் சிறந்த ஒரு மூலவளமாக மற்றைய மாணவர்களின் பெற்றோரும் இருப்பர். விசேடகல்வி திட்டம் எவ்வாறு செயற்படுகிறது என்பது பற்றி உங்கள் பாடசாலையில் உள்ள பிறபெற்றோருடனும் கதையுங்கள்: அல்லது உங்கள் பாடசாலைச் சபையின் விசேடகல்வி அறிவுரைச் செயற்குழுவுடன் (Special Education- Advisory Committee/ SEAC) தொடர்பு கொள்ளுங்கள் – மாதமொரு தடவை இவர்கள் யாவரையும் அனுமதிக்கும் கூட்டங்களை வழக்கமாக நடத்துகின்றனர்.

people for Education
BECAUSE EDUCATION MATTERS MOST

People for Education is an independent parents' group working to support public education in Ontario's English, French and Catholic schools.

You can reach us at: P.O. Box 64, Station P, Toronto, Ontario, M5S 2S6
Phone: 416-534-0100 • fax: 416-536-0100 • email: *info@peopleforeducation.com* or visit: *www.peopleforeducation.com*